அனுப்புநர்:-

S.C. கிப்ஸன்
TATA, பொதுச் செயலாளர்
தமிழ்நாடு அனைத்து ஆசிரியர் சங்கம்
235, வடக்குத் தெரு,
பரப்பாடி P.O - 627 110,
திருநெல்வேலி மாவட்டம்.




பெறுநர்:-
திரு. பொதுத்தகவல் அலுவலர் மற்றும்
நிதித் துறை செயலாளர் அவர்கள்,
நிதித்துறை
தலைமைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை -9

பொருள்:- தகவல் பெறும் உரிமைச் சட்டம் - 2005 ன் படி தகவல் கோருதல் சார்பு.

ஐயா,

வணக்கம், பொருளில் கண்ட சட்ட உரிமைப்படி கீழ் கண்ட தகவல்களை வழங்கிட வேண்டுகிறேன்.

(1) தமிழ்நாடு அரசு - 5வது ஊதியக்குழு (ஆணைக்குழு) 1988 ஊதியக்குழு அறிக்கை நகல் வழங்கிடவும்.

(2) 5ம் ஊதியக்குழு தமிழக இடைநிலை ஆசிரியருக்கு நடுவண் அரசு ஆசிரியருக்கு இணையான ஊதியம் எதன் அடிப்படையில் வழங்கியது.

(3) 5ம் ஊதிய ஆணையக்குழுவுக்கு பின் அதன் குறைபாடுகளை களைய மன்னர் இலக்கண் அமைக்கப்பட்டிருந்தால் அந்த குழுவின் அறிக்கை நகல் மற்றும் அரசு ஆணைகள் மற்றும் அதில் கல்வித்துறை சார்பு ஆணைகள் நகல் வழங்கிடவும்.

(4) 1996 ம் ஆண்டினை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்ட ஊதியக்குழு (அலுவலர்கள் குழு) அறிக்கை நகல் வழங்கிட வேண்டுகிறேன், இதில் இடைநிலை ஆசிரியருக்கு ஊதியம் எதன் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டது.

(5) 1996ம் ஆண்டினை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்ட ஊதியக்குழு (அலுவலர்கள்) குழுவின் ஊதிய முரண்பாடுகளை சரி செய்திட அமைக்கப்பட்ட ஒருநபர் குழு, மற்றும் பிற குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தால் அக் குழுக்களின் அறிக்கை நகல் வழங்கிடவும்.

(6) 2006ம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட 6வது ஊதியக்குழுவின்படி அமைக்கப்பட்ட திரு. ராஜீவ் ரஞ்சன் இ.ஆ.ப. தலைமையிலான ஒருநபர் குழுவின் அறிக்கைப்படி ரூ 4200 தர ஊதியத்திற்கு மாற்றி அமைக்கப்பட்ட பணியிடங்கள் விபரம் வழங்கிடவும்.

(7) தேர்வு நிலை / சிறப்பு நிலை 1-1-2006க்கு முன்னர் பெற்று 1.1.2006ல் திருத்திய ஊதிய விகிதத்தில் பணிபுரியும் இடைநிலை / துவக்கப்பள்ளி தலைமையாசிரியர் / பட்டதாரி ஆசிரியர்கள் 1-1-2006க்கு பின் குறைந்த தர ஊதியம் கொண்ட உயர் பதவி உயர்வு பெற்றால் உயர் ஊதியமான பழைய ஊதிய விகிதத்தில் தொடர முடியுமா? இவ்வாறான ஊதிய பிரச்சனைக்கு அரசு சார்பாக வெளியிட்டுள்ள அரசு ஆணைகள் அல்லது தெளிவுரை கடித நகல் வழங்கிடவும்.

(8) ஒரு பணியாளர் சிறப்பு நிலை/தேர்வு நிலையால் உயர் ஊதியம் பெற்று பணிபுரிந்து வருபவர் குறைந்த தர ஊதியம் உடைய உயர்பதவி சாதாரணநிலை ஊதியத்திற்கு பதவி உயர்வு பெற்றால் பதவி உயர்வுக்கு 3% ஊதிய உயர்வு வழங்கிட முடியுமா? விதியின் நகல் வழங்கிடவும்.

இப்படிக்கு

[signature] 15/4/14.

நாள்:- 15-04-2014

ஜெ. கிப்சன்.

நிதி (சிஎம்பிசி)த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

கடித எண்.21441/சிஎம்பிசி / 2014-1 நாள்: 08–5—2014

அனுப்புநர்
மு.து. சுமதி, எம்.ஏ.,
அரசு சார்புச் செயலாளர் மற்றும்
பொதுத் தகவல் அலுவலர்.

பெறுநர்
திரு.செ. கிப்ஸன்,
பொதுச் செயலாளர் (TATA), தமிழ்நாடு அனைத்து ஆசிரியர் சங்கம்,
235, வடக்குத் தெரு, பரப்பாடி – 627 110,
திருநெல்வேலி மாவட்டம்.

ஐயா,

பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் ஐந்தாவது மற்றும் ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைகள் தொடர்பாக சில தகவல்கள் கோரியது – தொடர்பாக.

பார்வை: 17–04–2014 அன்று இத்துறையில் பெறப்பட்ட தங்களது 15–04–2014 நாளிடப்பட்ட மனு.

* * * * *

பார்வையில் காணும் தங்களது மனுவின் மீது கவனம் ஈர்க்கப்பட்டு கீழ்க்கண்டவாறு தகவல் வழங்கப்படுகிறது:-

வரிசை எண்.1,3,4&5:

தாங்கள் குறிப்பிட்டுக் கோரியுள்ள ஊதியக் குழுக்கள் / ஒரு நபர் குழுக்கள் ஆகியவற்றின் பரிந்துரைகள் விவரம் மற்றும் பள்ளிக்கல்வித் துறை தொடர்பாக ஐந்தாவது ஊதியக் குழு காலத்தில் வெளியிடப்பட்ட அரசாணையின் விவரம் ஆகியவை கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது:-

| | | |
|---|---|---|
| 1. | Report of the Fifth Tamilnadu Pay Commission | 503 pages |
| 2. | Report of the Official Committee, 1992 | 276 pages |
| 3. | G.O.Ms. No.528, Finance(PC) Dept., dated 01-08-1992 | 3 pages |
| 4. | Report of the Official Committee, 1998 | 64 pages |
| 5. | Report of the One Man Commission, 1998 | 224 pages |

மேற்குறிப்பிட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் அரசாணை மொத்தம் 1070 பக்கங்கள் கொண்டதாகும். இவை தங்களுக்கு தேவைப்படும் பட்சத்தில், ஒரு பக்கத்திற்கு ரூ.2/– வீதம் மொத்தம் ரூ.2140/–ஐ

கீழ்க்குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பில் செலுத்தி, அச்செலுத்துச் சீட்டின் அசலினை இப்பிரிவிற்கு அனுப்பி வைக்கும் பட்சத்தில் மேற்குறிப்பிட்டுள்ள பரிந்துரைகள் / அரசாணையின் நகல்கள் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>கணக்குத் தலைப்பு</u>

0075-00 - Miscellaneous General Services - 800 - Other Receipts - BK - Collection of Fees under Tamil Nadu Registrar for Information. [DPC 0075 - 00 - 800 - BK - 0006].

<u>வரிசை எண்.2:</u>

ஐந்தாவது மற்றும் ஆறாவது ஊதியக் குழுக்களில் இடைநிலை ஆசிரியர் பணியிடத்திற்கான ஊதிய விகிதம் எதன் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து அவற்றின் பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பரிந்துரைகளின் நகல்களை வரிசை எண்.1-இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறையில் தாங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

<u>வரிசை எண்.6:</u>

ஒரு நபர்க் குழு, 2010-இன் பரிந்துரையின் அடிப்படையில் எவ்வகைப் பணியிடங்களுக்கு ரூ.4200 தர ஊதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் அப்பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பரிந்துரையின் நகலினை தமிழக அரசின் இணையதள முகவரியான **<u>www.tn.gov.in-</u>** இல் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>வரிசை எண்.7&8:</u>

இப்பொருள் தொடர்பாக அரசுக் கடித எண்.45113 / ஊதியப் பிரிவு / 2009-1, நிதித்துறை, நாள் 17-08-2009-இன் வரிசை எண்.13-இல் உரிய தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதையும், அக்கடிதத்தின் நகலினை தமிழக அரசின் இணையதள முகவரியான <u>www.tn.gov.in-இல்</u> இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

9/5/14.

அரசு சார்புச் செயலாளர் மற்றும்
பொதுத் தகவல் அலுவலர்.

www.tntam.in